பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 02 சனிக்கிழமை 15.01.2022 கதிர் 299

## மின்கம்பியில் சிக்கி பெண் பரிதாபப் பலி
### இளைஞர் கைது

வயல் ஒன்றுக்கு அருகில் மின்கம்பியில் சிக்கி பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

கெப்பட்டிபொல - வெலங்கஸ்தென்ன பிர தேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

☞2

# நாட்டில் மேலும் 160 ஒமக்ரோன் தொற்றாளர்கள்
### சந்திம ஜீவந்தர அதிர்ச்சித் தகவல்



**இலங்கையில் மேலும் 160 ஒமக்ரொன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று ஸ்ரீ ஜயவர்த னபுரம் பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப் பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர உறுதிப்படுத்தியுள்ளார்.**

☞2

## தடையாகும் 'லொக்டவுன்'




'லொக்டவுண்' (முடக்கம்) என்ற சொல்லைத் தடை செய்யப்பட்ட சொல்லாகப் பிரகடனப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொரோனா வைரஸால் நாட்டுக்கு இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படும் என்பதைத் தாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை எனவும் அவர் கூறினார்.

இந்த வைரஸ் பெருந்தொற்றுக்கு மத்தியில், லொக்டவுண் என்ற சொல்லைத் தடை செய்யப்பட்ட சொல்லாக்குவதற்குத் தான் சுகாதார

☞2

## அமைச்சரவை மறுசீரமைப்பு தாமதம்; ஏமாற்றத்தில் இரண்டு அமைச்சர்கள்!

புதிய ஆண்டின் ஆரம்பத்தில் அமைச்சரவையில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும் என அரசின் தரப்பில் கூறப்பட்டு வந்தது. எனினும், அது விரைவில் நடக்காது எனக் கூறப்படுகின்றது. இந்தநிலையில், அமைச்சரவை மறுசீரமைப்பு நடக்காத காரணத்தால், இரண்டு அமைச்சர்கள் கடும் ஏமாற்றத்தில் இருந்து வருகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோரை இவ்வாறு ஏமாற்றத்தில் இருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

☞2

## அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய 1,700 கொள்கலன்கள் துறைமுகத்தில்
### டொலர் தட்டுப்பாடு காரணமாகத் தேக்கம்

நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய சுமார் 1,700 கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் இரண்டு மாதங்களுக்கும் மேலாகத் தேங்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கியால், வணிக வங்கிகளுக்கு டொலர்களை விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது என அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதியாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

☞2

## சீனாவிடமிருந்து மீளவும் கடன் பெறும் இலங்கை



சீனாவிடமிருந்து புதிதாக மற்றுமொரு கடனைப் பெறுவதற்கான பேச்சுகளில் இலங்கை அரசு ஈடுபட்டு வரும் நிலையில், அவசியமான உதவிகளை வழங்க சீனா எப்போதும் தயார் என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இராஜதந்திரத் தொடர்புகள் ஆரம்பமானதிலிருந்தே இரு நாடுகளும் பரஸ்பரம் புரிந்துணர்வையும் ஒத்துழைப்பையும் வெளிப்படுத்தி வருகின்றன எனவும் சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சீனாவிடமிருந்து புதிதாகக் ☞2

## நாடாளுமன்றத்தில் கடந்த வருடம் உணவுக்காக 9 கோடி ரூபா செலவு
### கட்டுப்படுத்த செயலாளர் அதிரடி நடவடிக்கை

நாடாளுமன்றத்தில் கடந்த வருடம் உணவுக்காக 9 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது என நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத்தில் இடம்பெறும் பல்வேறு குழுக்களின் கூட்டத்தில் பங்கேற்பதற்காக வரும் அரச அதிகாரிகளுக்கும் நாடாளுமன்றத்தில் உணவு மற்றும் பானங்கள் வழங்கப்படுகின்றன.

அதற்கான செலவீனமும் இந்த 9 கோடி ரூபாவுக்குள் உள்ளடங்குகின்றது என அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், நாடாளுமன்றத்தில் உணவுகள், பானங்கள் ☞2

## 'மொட்டு' அரசின் பின்வரிசை உறுப்பினர்களுக்குள் பிளவு?

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பிளவு ஏற்பட்டுள்ளது என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பல பின்வரிசை உறுப்பினர்கள் அனுமதியின்றி தனித்தனியாக ஊடகவியலாளர் சந்திப்புகளை நடத்தியமையால் பிளவு ஏற்பட்டுள்ளது எனவும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அரசின் உயர் அதிகாரி ஒருவரின் வேண்டுகோளுக்கு இணங்க கடந்த வாரமும் அதற்கு முதல் வாரமும் பலர் தனித்தனியாக ஊடகவியலாளர் சந்திப்புகளை நடத்தியுள்ளனர்.

☞2

THARANY super market
தாரணி
சுப்பர்மாக்கட்டின் ஒரு ஆண்டு நிறைவை முன்னிட்டு
17.01.2022 நள்ளிரவு 12 மணி வரை
மாபெரும் பரிசு மழை
இன்னும் 03 நாள்களே

1 ஆம் பரிசு
ஒரு பவுண் தங்க கட்டி
GOLD BISCUIT
(8 GRAM GOLD)

2 ஆம் பரிசு
சாம்சங் டெப்லெட்
SAMSUNG TABLET

3 ஆம் பரிசு
சாம்சங் மொபைல்
SAMSUNG MOBILE
18.01.2022 ஆம் திகதி குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்.
பொருட்களைக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் பங்களிக்கும் வாய்ப்பு
அதிஷ்டக் குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்படும்
www.tharanysupermarket.com No.758, K.K.S.Road, Jaffna
(தட்டாதெருச் சந்திக்கு மிக அருகில்)
24 SERVICE

## அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தப்பட்ட போதிலும், இதுவரையில் உரிய தீர்வு கிடைக்கப்பெறவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கும் அத்தியாவசியப் பொருட்களை விடுவிக்க முடியாத காரணத்தால் நாட்டில் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், எதிர்வரும் 18ஆம் திகதி வர்த்தக அமைச்சருடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது எனவும் அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

## சீனாவிடமிருந்து ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடன்களைப் பெறுவதற்கான பேச்சுகள் ஓரளவுக்கு முன்னேற்றகரமான நிலையில் இருக்கின்றன எனவும், இறுதிக்கட்ட முடிவுகள் எடுக்கப்பட்டவுடன் அறிவிக்கப்படும் எனவும் சீன வெளிவிவகார அமைச்சு மேலும் கூறியுள்ளது.

## நாடாளுமன்றத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விரயமாவதைத் தடுப்பதற்காக நாடாளுமன்றச் செயலாளர் தம்மிக்க தஸநாயக்கவால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் நாடாளுமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைவாக நாடாளுமன்றத்தில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் வெளியேறும்போது அவர்கள் சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

அரிசி, மரக்கறிகள் உள்ளிட்ட பொருள்களின் விலைகள் கடுமையாக அதிகரித்துள்ளதால் நாடாளுமன்றத்தில் உணவு மற்றும் பானங்கள் தயாரிப்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## 'மொட்டு' அரசின் .......

இதேவேளை,

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புலனாய்வு அறிக்கையின் அடிப்படையில் சுசில் பிரேமஜயந்தவை இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து நீக்கியதாக பின்வரிசை உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்த கருத்துக்குப் பின்வரிசை உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்புத்

## அமைச்சரவை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவர்கள் இருவரும் தமக்கு வேறு அமைச்சுக்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர் எனப் பேசப்படுகின்றது.

அமைச்சு ஒன்றை மாற்றும்போது கவனத்தில்கொள்ள வேண்டிய விடங்களைப் பந்துல குணவர்தன விபரித்திருந்தார்.

ஓர் அமைச்சர் தற்போது வகித்து வரும் அமைச்சு வெற்றிகரமாக முன்னெடுக்கப்படவில்லை என்றால், அவருக்கு வேறு ஒரு அமைச்சுப் பதவியை வழங்க வேண்டும் எனவும், அமைச்சர் ஒருவர் மோசடியாக நடந்துகொண்டால் அவரை அமைச்சரவையில் இருந்து நீக்க வேண்டும் எனவும் பந்துல குறிப்பிட்டிருந்தார்.

எனினும், ஓர் அமைச்சர் தனக்கு வழங்கிய அமைச்சுப் பதவியில் வெற்றிகரமாகச் செயற்படவில்லை என்பதால், அவருக்கு வேறு ஓர் அமைச்சுப் பதவியை வழங்கும்போது, அவர் எப்படி வெற்றிகரமாகச் செயற்பட முடியும் என்பதை பந்துல குணவர்தன விளக்கவில்லை.

அதேவேளை, தான் வகிக்கும் கமத்தொழில் அமைச்சர் பதவி காரணமாக 35 ஆண்டுகளாகத் தான் உருவாக்கிய அரசியல் விம்பம் அழிந்து போயுள்ளது என விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டுள்ளார்.

பொருள்களின் விலை அதிகரிப்பு காரணமாக பந்துல குணவர்தனவும், சேதனப் பசளை பிரச்சினை காரணமாக மகிந்தானந்த அளுத்கமகேவும் மக்களின் கடும் விமர்சனங்களுக்கும் நகைப்புக்கும் உள்ளாகியுள்ளனர்.

## தடையாகும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சர் என்ற விதத்தில் தீர்மானித்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டை முடக்குமாறு அனைவரும் கூறுவதானது, மிகவும் இலகுவான விடயம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடு முடக்கப்பட்ட போதிலும், அரச ஊழியர்களின் சம்பளத்தை ஒரு ரூபாவினாலேனும் குறைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

உலக நாடுகள் இவ்வாறான நிலைமையை எதிர்நோக்கியுள்ள இந்தத் தருணத்தில், தம் மீது முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்களை பொறுத்துக் கொண்டு, தமது நடவடிக்கைகளை முன்னோக்கிக் கொண்டுசெல்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

5 ஆயிரம் ரூபா விதம், மூன்று தடவைகள் தமது அரசு மக்களுக்கு நிவாரண உதவித் திட்டத்தை வழங்கியது எனவும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேலும் கூறினார்.

## நாட்டில் மேலும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒமைக்ரொன் தொற்றாளர்களைக் கண்டறிவதற்காக ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக் கழகத்திற்கு அனுப்பப்பட்ட 182 மாதிரிகள் தொடர்பான இறுதி அறிக்கை இன்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டதை அடுத்து இந்தத் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மின்கம்பியில் சிக்கி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு உயிரிழந்தவர் 47 வயதுடைய குடும்பப் பெண் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தை அடுத்து, அனுமதியின்றி மின் இணைப்பை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 28 வயதுடைய இளைஞரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30. கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## உண்மையை அம்பலப்படுத்துவோம்

**இலக்கை அடைவது எமது இறுதி நோக்கு என்றாலும் சமய சந்தர்ப்பத்துக்கேற்ப பாதைகளை நாம் மாற்றிக்கொள்ளவேண்டும். அதில்தான் எமது இறுதி வெற்றி தங்கியிருக்கும்.**

**தமிழர்களின் உரிமைப் போராட்டத்திலும் இந்தத் தந்திரோபாயம் முக்கியமானது. பல சமயங்களிலும் இத்தகைய தந்திரங்களைக் கைவிடுவதால்தான் பெரும் பின்னடைவுகளை – பாதிப்புக்களை – தோல்விகளை நாம் சந்திக்க வேண்டி நேர்கின்றது.**

**இலங்கைத் தமிழ் மக்களின் எழுபத்தியைந்து ஆண்டு கால உரிமைப் போராட்டத்தில் வெளிப்படையான ஒரு விடயம் துலாம்பரமாகத் தோற்றி நிற்கின்றது. அந்த விடயத்தை உலகுக்குத் தெளிவாக – உறுதியாக – உணர்த்துவதில் நாம் தவறிழைத்திருந்தோம் என்பது தான் வரலாற்றுப் பட்டறிவாம். அதை நாம் இன்னமுமே உணர்ந்தவர்களாக – புரிந்தவர்களாக – இல்லை என்பதுதான் கவலைக்குரியது.**

**அந்த விடயம் – இலங்கைத் தீவின் வரலாற்றுப் பூர்வீகக் குடிகளான தமிழர்களுக்கு நீதி, நியாயமான தீர்வு எதனையும் வழங்கும் எண்ணப் பாங்கோ, சிந்தனையோ, கருத்தோ பௌத்த – சிங்களப் பேரினவாதத்தில் மூழ்கிக் கிடக்கும் தென்னிலங்கைச் சிங்களத்துக்கு கிடையவே கிடையாது என்ற யதார்த்தப் புறவுண்மையை சர்வதேசத்துக்கு அப்பட்டமாக அம்பலப்படுத்தி உணர்த்த நாம் தவறி வருகின்றோம்.**

**2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுக்களில் ஓர் இணக்கம் எட்டப்பட்டது. உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு சமஷ்டித் தீர்வை ஆராய்ந்து பார்ப்பதற்கான இணக்கத்துக்கு இலங்கை அரசு சார்பில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும், விடுதலைப் புலிகள் தரப்பில் அதன் பேச்சுக் குழுத் தலைவர் மதியுரை அன்டன் பாலசிங்கமும் இணங்கினர்.**

**இந்த இணக்கம் தமிழர் பக்கத்திலும் பலத்த சலசலப்பைத் தோற்றுவிக்கத் தவறவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் – அதன் தலைவர் வே.பிரபாகரனின் – இறுதி இலக்கான தனித் தமிழீழம் என்ற கோட்பாட்டையே விட்டுக் கொடுக்க பாலசிங்கம் துணிந்து விட்டார் என்ற பிரசாரம் பெரிய அளவில் முன்னெடுக்கப்பட்டது. பாலசிங்கத்தின் அந்தத் தீர்மானத்தையும் நடவடிக்கையையும் வைத்து தராகி சிவராம் உட்பட பலர் பெருத்த எடுப்பில் ஒரு பிரசாரத்தை முன்னெடுத்தனர். அப்போது பாலசிங்கம் ஒரு விடயத்தைத் தெளிவு படுத்தினார்.**

**தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் இறுதி இலக்கு தனியான தமிழர் தாயகத்தைப் பாதுகாப்பது தான். அதில் எந்தக் கருத்து வேறுபாடும் கிடையாது. ஆனால் எமது உரிமைப் போராட்டத்தின் மையை இழையாக – நியாயமாக – உண்மையாக – ஒடுவது ஒன்று இருக்கின்றது. இந்த இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கு நீதி, நியாயமான – சர்வதேசம் நியாயமானது என ஏற்றுக் கொள்ளக் கூடிய – எந்தத் தீர்வையும் சிங்களம் நமக்குத் தராது என்பதுதான் அது. அதன் காரணமாகத் தான் எங்களது உரிமைப் போராட்டம் நியாயமானதாகின்றது. அப்படி சிங்களம் நீதியான எதையும் தரவே தராது என்பதை நாம் உலகுக்கு நிரூபிக்க வேண்டும். அதற்கான ஒரு நகர்வுதான் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டித் தீர்வை ஆராய்ந்து பார்ப்பது என்ற எமது வலை விரிப்பும் – என்றார் பாலசிங்கம்.**

**கொழும்பின் உண்மை முகத்தை சர்வதேசத்தின் முன் நிரூபிப்பதும் எமக்கு நீதி கிட்டுவதற்கான முயற்சியின் – தந்திரோபாயத்தின் – ஓர் அங்கமாக இருக்க வேண்டும்.**

**13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோரல், அதையும் தாண்டி தீர்வைத் தருவோம் என்ற கொழும்பின் உறுதிப்படுத்தலை வற்புறுத்தக் கோருதல் போன்றவையும் இத்தகைய தந்திரோபாயத்தின் அங் கங்கள் தாம்.**

# எரிபொருள் தட்டுப்பாடு எந்த நேரமும் வரலாம்!

## எச்சரிக்கின்றார் கம்மன்பில



எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்று முன்னர் நான் கூறிவந்த போதும் இப்போதைய நிலைமையில் என்னால் அவ்வாறு உறுதியாகக் கூறமுடியாது.

அதனால் இந்த மாதத்தில் எவ்வேளையிலும் எரிபொருளுக்கான தட்டுப்பாடு ஏற்படுவதற்கான அபாயம் இருக்கின்றது என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய எரிபொருள் நிலைமை தொடர்பாகக் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு –

எரிபொருள் விநியோகத்தை விடவும் எரிபொருளுக்கான பணத்தை செலுத்துவதிலேயே பிரச்சினை உள்ளது.

வரும் எரிபொருள் கப்பல்கள் 7, 8 நாள்களாக எரிபொருளை இறக்க முடியாத நிலைமையில் இருக்கின்றன.

வங்கிக் கடன் பத்திரங்கள் இன்றி எரிபொருள் கப்பல்களைகொண்டுவந்தாலும் அவற்றுக்குத் தேவையான டொலர்களைச் சேர்த்துக்கொள்ளும்வரை குறித்த எரிபொருள் அடங்கிய கப்பல்களை துறை முகத்தில் நிறுத்திவைக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அத்துடன் டொலர் பிரச்சினையை கட்டுப்படுத்திக்கொள்ள நாங்கள் சீனாவிடம் 30 கோடி டொலர் கடனைப் பெற்றோம். இந்தியாவிடம் 40கோடி டொலரைப் பெற்றோம்.

பங்களாதேஷிடம் 25 கோடி டொலரைப் பெற்றோம். ஆனால் அவை அனைத்தும் ஒரு மாதத்துக்கு எரிபொருளை கொண்டு வர போதுமானது அல்ல. ஒருமாதத்துக்கு எரிபொருள் கொண்டுவர 40 கோடி டொலர் தேவைப்படுகின்றது.

இந்நிலையில் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நெருக்கடி நிலைமையில் எரிபொருள் தொடர்பில் நான் இதற்கு முன்னர் உறுதி மொழி வழங்கியயைபோல் தற்போது என்னால் வழங்க முடியாது.

அதற்காக அவசரமாக சென்று எரிபொருளை நிரப்பிக்கொள்ள வேண்டியதில்லை. எதிர்வரும் தினங்களுக்குத் தேவையான எரிபொருள் இருக்கின்றது.

இதற்கு முன்னர்போன்று தொகை களஞ்சியம் குறைவடைந்துள்ளது. எரிபொருள் முடியும் நிலையிலேயே இறக்குமதி செய்யப்படுகின்றது.

அதனால் ஜனவரியில் எவ்வேளையும் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படக்கூடிய அபாயம் இருக்கின்றது.

ஆனால் அந்த அபாயம் உருவாக முன்னர் அது தொடர்பில் மக்களுக்கு அறிவிக்க எதிர்பார்க்கின்றேன். அதற்காகத் தட்டுப்பாடு ஏற்படும்வரை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கமாட்டோம்.

அதற்குத் தேவையான முடியுமான முயற்சிகளை மேற்கொள்வோம். அதன் காரணமாக பற்றாக்குறை ஏற்படாமலும் இருக்கலாம். என்றாலும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு இடமளிப்பதில்லை என முன்னர் தெரிவித்ததுபோன்று தற்போது என்னால் தெரிவிக்க முடியாமல் இருக்கின்றது. ஜனவரிக்கு பின்னர் ஏதாவது நடவடிக்கை எடுக்கலாம். ஏனெனில் பெப்ரவரியில் ஒருசில நாடுகளில் நாள் கடன் வசதிகளை கேட்டிருக்கின்றேன். எனினும் ஜனவரி அவதானமிக்கதாகும். – என்றார்.

# சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு திட்டமிட்டபடி மேம்படுத்த நடவடிக்கை!

வீழ்ச்சியடைந்துள்ள இலங்கையின் சுற்றுலாத் துறையைத் திட்டமிட்ட வகையில் மேம்படுத்துவதற்கு நடவடிக்கைஎடுக்கப்படும் என, சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் ஹெட்டிஆரச்சி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற சுற்றுலாவுக்கு அனுமதி என்ற தொனிப் பொருளிலான ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது கருத்து வெளியிட்ட சுற்று லாத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டிஆரச்சி –

சுற்றுலாத் துறையின் வரலாறு காணாத வீழ்ச்சிக்கு உலகளாவிய கொரோனாத் தொற்றுப் பரவல் ஒரு முக்கிய காரணியாக மாறியிருக்கின்றது என்றும் இது, சுற்றுலாத்துறையில் பத்து லட்சத்துக்கும் அதிகமான நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை இழக்கச்செய்யும் அளவுக்கு பலமிக்கதாக இருந்தது என்றும் தெரிவித்தார்.

அதன் மூலம் தேசிய பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்குக் கிடைத்துவந்த பாரிய நிதியை நாடு இழந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டுக்கு வெளிநாட்டு நிதி கிடைக்கும் பிரதான மூல காரணிகளில் சுற்றுலாத்துறை மூன்றாவது இடத்தில் காணப்பட்டது.

ஏனைய நிதி மூலங்களுடன் ஒப்பிடுகையில், சுற்றுலாத்துறையில் இருந்தே நாட்டுக்கு நிகர வருமானம் கிடைத்தது.

புதிய திட்டங்கள் மற்றும் உத்திகளின்படி, 2030 ஆம் ஆண்டளவில் நாடு 70 லட்சம்; சுற்றுலா பயணிகளின் வசதி மற்றும் முகாமைத்துவத்தை உயர்ந்த மட்டத்தில் பேணுவதற்குத் தேவையான நவீன மென்பொருளை எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, பொலிஸாரால் நடத்தப்படும் சுற்றுலா பொலிஸ்சேவையைப் புதிய வடிவில் மேற்கொள்வதற்காக அதன் பிரிவுகளை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளதோடு, அதற்கு அனுமதி அளிப்பதற்கான அடிப்படைப் பணிகள் நடைபெற்று வருகின்றன எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

மேலும், அதற்கு முன்னர் சுற்றுலாத் துறையில் ஈடுபட்டிருந்த பலர் கொரோனாத் தொற்றை அடுத்து அத்துறையில் இருந்து வெளியேறியுள்ளமை பாரிய சவாலாகக் காணப்படுவதாகவும் இந்தச் சவாலை முறியடிக்க புதிய தொழில் முயற்சியாளர்களை இந்தத் துறைக்கு ஈர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம், இலங்கையின் தடுப்பூசி ஏற்றல்நடவடிக்கைதொடர்பாகசர்வதேசத்தில் நிலவுகின்ற நன்மதிப்பை இலங்கையின் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்குப் பயன்படுத்துவது காலத்துக்குப் பொருத்தமானதாகும் என்றும் இதற்கு அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம் என்றும் தலைவர் மேலும் குறிப்பிட்டார்.



# பிரித்தானியாவில் கண்டுபிடிக்கப்பட்ட இராட்சதகடல்டிராகன்!

பிரித்தானியாவின் ரட்லாந்தில் உள்ள யூற்மியிழிஜ– வாட்டரில் டால்பின் போன்ற இக்தியோசரின் 30 அடி எலும்புக்கூட்டை நிபுணர்கள் கண்டுபிடித்தனர்.

மேலும், பிரித்தானியாவில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய மற்றும் முழுமையான புதைபடிவமான கடல் டிராகன் என்று விஞ்ஞானிகள் பாராட்டியுள்ளனர். குறித்த கடல் டிராகன் 180 மில்லியன் ஆண்டுகள் பழமையானது. மேலும் அவை 82 அடி (25 மீட்டர்) வரை வளரும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவை முதல் ஷ்உஜுமிஜுதீலி–விழிற்ஷவி, கடல் டிராகன்கள் என்று அழைக்கப்படுகின்றன, ஏனெனில் அவை மிகப் பெரிய பற்கள் மற்றும் கண்களைக் கொண்டிருக்கின்றன, 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் புதைபடிவ வேட்டைக்காரர் மற்றும் பழங்கால ஆராய்ச்சியாளர் மேரி அன்னிங் (Mary Anning)என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த இனத்தை ஆய்வு செய்த பழங்கால ஆராய்ச்சியாளர் டாக்டர் டீன் லோமாக்ஸ் கூறியது, பிரித்தானியாவில் பல இக்தியோசர் புதைபடிவங்கள் காணப்பட்டாலும், பிரித்தானியாவில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய எலும்புக்கூடு ரட்லாண்ட் இக்தியோசர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது உண்மையிலேயே முன்னோடியில்லாத கண்டுபிடிப்பு மற்றும் பிரிட்டிஷ் பழங்கால வரலாற்றில் மிகப்பெரிய கண்டுபிடிப்புகளில் ஒன்றாகும்.

# நெருங்கும் சிறியகோள்; பூமி மீதும் மோதுமா?



சூரிய மண்டலத்தில் சுற்றிவரும் பாறைத் துகள்கள் ஒன்றிணைந்த 'ஆஸ்டராய்டு' எனப்படும் சிறிய கோள் பூமிக்கு அருகில் வர உள்ளது. இது பூமி மீது மோதும் அபூர்வ நிகழ்வு நடக்கலாம் என, விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

சூரிய மண்டலம் 460 கோடி ஆண்டுகளுக்கு முன் உருவான போது அதில் இருந்து வெளிப்பட்ட பாறைத் துகள்கள் ஒன்றாக இணைந்துஆயிரக்கணக்கானசிறிய கோள்கள் உருவாகின. இவை சூரிய மண்டலத்தை சுற்றி வருகின்றன.

கடந்த 1974இல் ஆஸ்திரேலிய விஞ்ஞானியால் கண்டுபிடிக்கப்பட்ட 7 ஆயிரம் 482 என்றழைக்கப்படும் சிறிய கோள் வரும் 18ஆம் திகதி பூமிக்கு மிக அருகில் வரும் என, அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பான 'நாசா'வின் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த சிறியகோள் 19.3 லட்சம் கி.மீ., தொலைவில் பூமியை ஒட்டி செல்லும். இது பூமிக்கும் நிலவுக்கும் உள்ள தொலைவைவிட 5.15 மடங்கு அதிகம். இந்த சிறியகோள் மணிக்கு 70,416 கி.மீ., வேகத்தில் வந்து கொண்டிருக்கிறது.

ஒரு கி.மீ., விட்டமும், 3 ஆயிரத்து 300 அடி உயரமும் உள்ள இந்த சிறிய கோள் பிரமாண்டமாக உள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இது பூமியின் மீது மோதுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு மிகப் பெரிய சிறுகோள்கள் பூமியை தாக்குவது ஆறு லட்சம் ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் அபூர்வ சம்பவமாகவும் கூறப்படுகிறது.

சூரிய மண்டலத்தில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறிய கோள்கள் பூமிக்கு அருகில் உள்ளன. இவற்றில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவை பூமியை தாக்கக் கூடியவையாக இருக்கலாம் என்றும் நாசா விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்த ஆண்டில் கடந்த 13 நாள்களில் மட்டும் மூன்று சிறிய கோள்கள் பூமிக்கு அருகில் வந்துள்ளன. அதில் மிகப் பெரிய சிறியகோள், 49 ஆயிரம் மீற்றர் விட்டம் உடையதாக இருந்தது.

# ஒமிக்ரோனைக் கட்டுப்படுத்த கடுமையாகப் போராடும் சீனா!



உலகெங்கும் ஒமிக்ரோன் உருத்திரிவு கொரோனா பரவல் தீவிரமடைந்து கடும் நெருக்கடி உருவாகியுள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்த சீனா கடுமையாகப் போராடி வருகிறது.

புதிய திரிவு நாட்டுக்குள் தீவிரமடையாது கட்டுப்படுத்த கடுமையான கட்டுப்பாடு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சீனா எடுத்துள்ளது.

சீனாவில் நேற்று வெள்ளிக்கிழமை உள்நாட்டில் 104 புதிய கொவிட் தொற்று நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என உள்ளூர் ஊடகங்கள் இன்று சனிக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளன.

ஹெனானில் 52, தியான்ஜினில் 39, குவாங்டாங்கில் 08, ஷாங்சியில் 04, மற்றும் ஜெஜியாங்கில் 01 தொற்று நோயாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டதாக சீன தேசிய சுகாதார ஆணையகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை விட வெளிநாடுகளில் இருந்து வந்த 61பேருக்கும் நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதற்கிடையில், தியான்ஜின் நகரத்தை அடுத்து தென் சீனாவின் ஜுஹாய் மாகாணத்திலும் ஒமிக்ரோன் தொற்று நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். தென் சீனாவின் ஜுஹாய் நகரில் நேற்று வெள்ளிக்கிழமை 07 பேருக்கு ஒமிக்ரோன் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக சீன ஊடகமான குளோபல் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

# வட கொரியாவின் ஏவுகணை சோதனை எதிரொலி: அதிகாரிகள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை!

வட கொரியாவின் அண்மைய தொடர்ச்சியான ஏவுகணை சோதனைகளுக்குப் பதிலடியாக, நாட்டின் 5 அதிகாரிகள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

வட கொரியாவின் ஏவுகணைத் திட்டத்துக்குத் தேவையான பொருள்கள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பெற்றுத் தந்த 5 அதிகாரிகள் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படுவதாக நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதுதவிர, வட கொரிய ஆயுதத் தயாரிப்பு திட் டங்களுக்கு உறுதுணையாக இருக்கும் மேலும் ஒரு வட கொரியர், ஒரு ரஷ்யர், ஒரு ரஷ்ய நிறு வனம் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படுவதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒலியைப் போல் 5 மடங்கு வேகமான (ஹைப்பர்சோனிக்) ஏவுகணையை மூன்றாவது முறையாகக் கடந்த செவ்வாய்க்கிழமை பரிசோதித்துப் பார்த்ததாக வட கொரியா அறிவித்தது.

அதற்குப் பதிலடியாகவே வட கொரிய அதிகாரிகள் மீது அமெரிக்கா தற்போது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

# பூட்டானுக்குள் சட்டவிரோதமாக கிராமங்களை கட்டமைக்கும் சீனா!



பூட்டானுக்குள் சட்டவிரோதமாக இரண்டு கிராமங்களை சீனா கட்டமைத்து வருவது குறித்த செயற்கைக் கோள் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. டோக்லாம் பள்ளித்தாக்கு பகுதியில் இருந்து 30 கிலோமீற்றர் தொலைவில் வீதி கட்டுமான நடவடிக்கைகளை சீனா மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் ஒரு முழு அளவிலான கிராமத்தை அது உருவாக்கி உள்ளது கண்டறியப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நவம்பரில் சீனாவின் இந்த அத்துமீறல் கட்டுமானப் பணிகளைக் கண்டறிந்ததாக இன்டல் ஆய்வகத்தின் முன்னணி ஆராய்ச்சியாளர் டேமியன் சைமன் தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கும் பூட்டானுக்கும் இடையே உள்ள சர்ச்சைக்குரிய பகுதியில் நடந்து வரும் இந்த கட்டுமானப் பணிகள் மேம்பாட்டு நடவடிக்கைகள் மறுக்க முடியாத சான்றாக உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இராணுவ ஹெலிகொப்டர் விபத்துக்கு மோசமான வானிலையே காரணமாம்



கோவை மாவட்டம் சூலூரில் இருந்து, நீலகிரி மாவட்டம் வெலிங்டனில் உள்ள இந்திய இராணுவக் கல்லூரியில் நடைபெறவிருந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக இந்திய முப்படைத்தலைமைத் தளபதி பிபின் ராவத் உட்பட 14 பேர் பயணம் செய்த இராணுவ ஹெலிகொப்டர் கடந்த டிசெம்பர் 8ஆம் திகதி குன்னூரில் விபத்துக்குள்ளானது. அதில் பயணம் செய்த 14 பேரும் பலியாகினர்.

பாதுகாப்பு அம்சங்கள் நிறைந்த ஹெலிகொப்டர் விபத்தில் சிக்கியதற்கு மோசமான வானிலை காரணமா அல்லது சதிச் செயலா? என்ற சந்தேகம் எழுந்தது. எனவே, இந்தச் சம்பவம் குறித்து விசாரித்து அறிக்கை தாக்கல் செய்ய விமானப்படைத் தளபதி மானவேந்திரா சிங் தலைமையிலான முப்படை அதிகாரிகளைக் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு தனது விசாரணையை நிறைவு செய்து சமீபத்தில் அறிக்கையைத் தாக்கல் செய்தது.

இந்த நிலையில், முப்படைக் குழு விசாரணை அறிக்கையின் முதல் கட்டத் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக இந்திய விமானப்படை வெளியிட்டுள்ள அறிக்கையில், டிசெம்பர் 8 ஆம் திகதி நிகழ்ந்த ஹெலிகொப்டர் விபத்துத் தொடர்பாக விசாரணை நடத்திய முப்படைக் குழு, அதன் முதற்கட்ட விசாரணை அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. அதில், ஹெலிகொப்டர் விபத்துக்கு இயந்திரக் கோளாறோ, நாசவேலையோ அல்லது கவனக்குறைவோ காரணம் அல்ல எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹெலிகொப்டர் விபத்துக்கு மோசமான வானிலையே காரணம் என்றும் எதிர்பாராத விதமாக திரண்டுவந்த திடீர் மேகக் கூட்டங்களுக்குள் ஹெலிகொப்டர் நுழைந்ததால் விபத்துக்குள்ளானது என்றும் அந்த விசாரணை அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாகவும், குறிப்பிடப்பட்டுள்ளது.

# சபரிமலையில் காட்சியளித்தது மகர ஜோதி சரண கோஷத்துடன் தரிசனம் செய்த பக்தர்கள்

சபரிமலை ஐயப்பன் கோயிலில் மகர விளக்கு பூசையை முன்னிட்டு கடந்த மாதம் 30 ஆம் திகதி நடை திறக்கப்பட்டு மகர விளக்குக் கால பூசைகள் நடந்து வந்தன. விழாவின் சிகர நிகழ்ச்சியான மகர ஜோதி தரிசனம் காட்சியளிப்பதாக நம்புகின்றனர். மகர விளக்கு பூசையின்போது ஐயப்பனுக்கு அணிவிக்கப்படும் தங்க ஆபரணங்கள் அடங்கிய 3 பெட்டிகள் பந்தளம் வலிய கோயிக்கல் சாஸ்தா கோவிலில் இருந்து நேற்று மாலை பட்டன. தொடர்ந்து தீபாராதனை நடைபெற்றது. மாலை 6.30 மணிக்கு அலங்கார தீபாராதனைக்குப் பின்னர், பொன்னம்பலமேட்டில் மகர ஜோதி காட்சி அளித்தது. மூன்று முறை தொடர்ந்து மகர ஜோதியை பக்தர்கள்



நேற்று இடம்பெற்றது.

பிரசித்தி பெற்ற ஐயப்பன் கோயிலில் தை முதல் நாள் மகர விளக்குப் பூசைத் திருவிழா கொண்டாடப்படுகிறது. மகர சங்கராந்தி நாளில், சூரியன் மறைவுக்குப் பின்பு பொன்னம்பல மேட்டில் பேரொளி ஒன்று தோன்றி மறைகிறது. சபரிமலையில் இருந்து இந்தப் பேரொளியைக் காணும் பக்தர்கள் ஐயப்பனே ஜோதி வடிவில் சபரிமலை சந்நிதானத்துக்குக்கொண்டுவரப்பட்டு, அங்கு திருவாபரணப் பெட்டிகளுக்கு திருவிதாங்கூர் தேவஸ்தானம் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக் கப்பட்டது.

அதன் பின்னர், பதினெட்டாம்படி வழியாகக் கொண்டு செல்லப்பட்ட திருவாபரணங்களை தந்திரியும், மேல்சாந்தியும் பெற்றுக் கொண்டனர். பின்னர் அந்த ஆபரணங்கள் ஐயப்பனுக்கு அணிவிக்கப் தரிசித்தனர். அப்போது சுவாமியே சரணம் ஐயப்பா என்ற சரணகோஷம் எழுப்பி பக்தி பர வ சமடைந்தனர். சந்நிதானம், பம்பை உள்ளிட்ட 8 இடங்களில் இருந்து மகர ஜோதியை பக்தர்கள் தரிசனம் செய்வதற்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பக்தர்கள் கூட்டத்தை ஒழுங்கு படுத்த ஏராளமான பொலி சாரும் கடைமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.



# மூன்று அல்லது நான்கு தொகுதிதான் பா.ஜ.க.வுக்கு உ.பி. தேர்தலில் அகிலேஷ் யாதவின் புதுக் கணிப்பு

உத்தரப் பிரதேசத்தில் தேர்தல் பிரசாரம் சூடுபிடிக்கத் தொடங்கி உள்ள நிலையில், ஆளும் கட்சியான பா.ஜ.கவில் இருந்து அதிருப்தித் தலைவர்கள் அடுத்தடுத்து விலகுகின்றமை அக்கட்சிக்கு பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது.

அக்கட்சியின் எம்.எல்.ஏ.வும், அமைச்சருமான சுவாமி பிரசாத் மவுரியாவும், அவரைத் தொடர்ந்து மேலும் 6 எம்.எல்.ஏக்களும் தங்களது பதவிகளைப் ராஜினாமாச் செய்தனர். அவர்கள் அனைவரும் நேற்று அகிலேஷ் யாதவ் முன்னிலையில் சமாஜ்வாடி கட்சியில் இணைந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்த அகிலேஷ் யாதவ், உத்தரப்பிரதேச தேர்தலில் 20 சதவீதமக்கள்மட்டுமேபா.ஜ.கவை ஆதரிப்பார்கள். மீதமுள்ள 80 சதவீதம் பேர் சமாஜ்வாடி கட்சியையே ஆதரிப்பார்கள்.

உத்தரப் பிரதேசத்தில் 80 சதவீத ஆதரவாளர்கள் ஒருபுறமும், 20 சதவீத ஆதரவாளர்கள் மறுபுறமும் இருக்கின்றமை முதல்வர் யோகி ஆதித்யநாத் பேசியிருக்கிறார். ஆனால், சுவாமி பிரசாத் மவுரியா மற்றும் முக்கிய தலைவர்கள் சமாஜவாடி கட்சிக்கு வந்த பிறகு, பா.ஜ.க. இந்த 20 சதவீதத்தைக் கூட இழக்கும். இதேபோல், 403 தொகுதிகள் கொண்ட உத்தரப் பிரதேச சட்ட சபையில் தாம் நான்கில் மூன்று பங்கு தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என பா.ஜ.க. கூறுகிறது. வெறும் மூன்று அல்லது நான்கு தொகுதிகளில் வெற்றி பெறுவார்கள் என்பதே அதன் அர்த்தம், என்று தெரிவித்திருக்கிறார்.

# தமிழ் நாட்டில் தொற்றுப் பரவல் தீவிரம் ஆட்சியர்களுக்கு ராதாகிருஷ்ணன் கடிதம்

தமிழ்நாட்டில் தினசரி கொரோனாப் பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் மாநில சுகாதாரத்துறைச் செயலர் ராதா கிருஷ்ணன் கடிதம் எழுதியுள்ளார். அதில் சில முக்கிய தகவல்களை அவர் பகிர்ந்துள்ளார்.



இந்த அலையில் இறப்பைப் பெருமளவில் குறைக்க வேண்டும்.

கொரோனாத் தடுப்பு நெறிமுறைகளை மக்கள் பின்பற்றுகின்றமையை உறுதிப்படுத்த வேண்டும்.

எவரைப் பரிசோதிக்க வேண்டும், எவரையெல்லாம் பரிசோதிக்க அவசியமில்லை எனவும் அறிகுறி இல்லையென்றால் பரிசோதிக்கத் தேவையில்லை என்றும் ஐ.சி.எம்.ஆர். கொடுத்துள்ள வழிகாட்டுதல்களை முறையாகக் கடைபிடிக்க வேண்டும்.

தொற்று உறுதியாகும் நபர்களோடு தொடர்புடைய இடங்களில் கூடுதல் கவனம் தேவை.

கொவிட் பராமரிப்பு மையங்கள் முழுவீச்சில் பயன்பாட்டில் இருக்க வேண்டும்.

போன்ற விடயங்களில் அதிக அவதானம் செலுத்துமாறு அவர் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாட்டில் தினசரி கொரோனா பாதிப்பு அதிகரித்துக் கொண்டே வரும்நிலையில், இந்த அறிவுறுத்தல் கடிதம் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு பிரதமர் மோடி தமிழில் வாழ்த்து

உலகப் பொதுமறையாம் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரைப் போற்றும் விதமாக, ஒவ்வோர் ஆண்டும் தை இரண்டாம் நாள் திருவள்ளுவர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இத்தினத்தையொட்டி, திருவள்ளுவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக பலரும் தங்களின் சமூக வலைதளப் பக்கங்களில், திருக்குறள்களைப் பதிவிட்டு திருவள்ளுவரின் பெருமையை நினைவுகூர்ந்து வருகின்றனர்.

அந்தவகையில், திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, திருவள்ளுவர் குறித்து தனது டுவிட்டர் தளத்தில் தமிழில் பதிவிட்டுள்ளார்.

திருவள்ளுவர் தினத்தில்



அவருக்கு அஞ்சலி செலுத்துகிறேன். அவரது கோட்பாடுகள் அறிவுத்திறன்மிக்க நடைமுறைக்கேற்றவை. பன்முகத்தன்மைக்கும் அறிவுசார் ஆழத்திற்காகவும் அவை தனித்து நிற்கின்றன. கடந்த ஆண்டு நான் கன்னியாகுமரியில் ஒளிப்பதிவு செய்திருந்த திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் நினைவகத்தின் காணொலியைப் பகிர்கிறேன், என்று குறிப்பிட்டு அந்தக் காணொலியையும் இந்தியப் பிரதமர் மோடி பகிர்ந்திருக்கிறார்.

# தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்கும் ஆண்டாக இந்த ஆண்டு அமையும்

## நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நம்பிக்கை



தமிழர்களுக்கு சிறந்த தீர்வொன்று கிடைக்கக் கூடிய ஆண்டாக இந்த ஆண்டு அமையும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிகுடி நியு ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தின் கலாசாரப் பிரிவின் ஏற்பாட்டில் நந்தவனம் முதியோர் இல்லத்தில் வெள்ளிக்கிழமை பொங்கல் விழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

குறித்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே இரா.சாணக்கியன் தமிழர்களுக்கு சிறந்த தீர்வொன்று கிடைக்ககூடிய ஆண்டாக இந்த ஆண்டு அமையும் என்று குறிப்பிட்டுள்ளார். நாங்கள் அனைவரும் நம்பிக்கையுடன் பயணிக்கவேண்டும் எனவும் அவர் இதன் போது வலியுறுத்தியிருந்தார்.

இதேவேளை, குறித்த நிகழ்வில் கிராம முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# மட்டு .கல்குடா கடலில் நீராடிய சிறுவர்கள் மாயம்

மட்டக்களப்பு – கல்குடா, கும்புறுமூலை கஜுவத்தை கடலில் நேற்று நீராடிய ஏழு சிறுவர்களில் இருவர் கடலில் மூழ்கிக் காணாமல் போயுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு – கிரான் பகுதியைச் சேர்ந்த ஏழு சிறுவர்கள் குறித்த கடலில் நீராடிக் கொண்டிருந்த போதே இருவர் கடலில் மூழ்கியுள்ளனர்.

இதில், கிரான் பிரதான வீதியைச் சேர்ந்த ஜீவானந்தா சுஜினன் (வயது 16), ச.அஸ்வன் (வயது 16) ஆகிய இரு சிறுவர்களும் கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளனர். கடலில் நீராடிய மற்றுமொரு சிறுவன் காப்பாற்றப்பட்டு வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான். கடலில் காணாமல் போன சிறுவர்களை தேடும் பணிகள் இடம்பெற்று வருகின்றமையும், இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஓட்டமாவடியில் மாட்டிறைச்சிக்கு விலையேற்றம்!!

ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் மாட்டிறைச்சிக் கடைகளில் திடீரென விலை அதிகரிக்கப்பட்டுள்ளமையால் நுகர்வோர் அதிருப்தி அடைந்துள்ளனர்.

ஓட்டமாவடி பிரதேச சபை மாட்டிறைச்சியை விற்பனை செய்ய கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்துள்ள நிலையில், குறித்த பகுதியிலுள்ள சில மாட்டிறைச்சிக் கடை உரிமையாளர்கள் விலைகளை அதிகரித்து விற்பனை செய்கின்றனர் என நுகர்வோர் குற்றம் சுமத்துகின்றனர்.

குறித்த பகுதியில் ஒரு கிலோ மாட்டிறைச்சியின் விலை 1000, 1100, 1200 ஆகிய குழப்பமான விலைகளில் விற்பனை செய்யப்படுகிறது.

எனவே, இது தொடர்பாக ஓட்டமாவடி பிரதேச சபை உடனடியாக தலையீடு செய்து விலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்று நுகர்வோர்கள் வேண்டிக் கொள்கின்றனர்.

# கந்தளாய் பகுதியில் நீர் விநியோகத்தை துண்டிக்க சென்ற அதிகாரிகளுக்கு அடி

நீர் விநியோகத்தை துண்டிக்க வீட்டுக்குச் சென்ற அதிகாரிகள் வீட்டில் இருந்த பெண் ஒருவரால் தாக்கப்பட்டுள்ளனர். கட்டணம் செலுத்தாததால் குடிதண்ணீர் விநியோகத்தை நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சென்றிருந்தனர்.

கந்தளாய், பெரமடுவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகச் தெரிவிக்கப்படுகின்றது. அதிகாரிகள் வரும்போது வீட்டில் இருந்த பெண் அவர்களைத் தாக்கியமையையும் தடுத்தமையையும் அதிகாரி ஒருவர் தனது கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்துள்ளார்.

## கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு

# புதிய அதிகாரியாக அலியார் றபீக் நியமனம்



கல்முனை தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக நிந்தவூறைச் சேர்ந்த பிரதான பொலிஸ் பரிசோதகர் அலியார் றபீக் பதவியுயர்வு பெற்று தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தின் நிர்வாகப்பிரிவு பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய நிலையிலேயே கடந்த 2020.05.08ஆம் திகதியன்று பிரதம பொலிஸ் பரிசோதகராக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

முன்னாள் கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக செயற்பட்ட கே.எச் சுஜீத் பிரியந்த இடமாற்றம் பெற்று சென்றமையை அடுத்து நிலவிய பதவி வெற்றிடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாவடிப்பள்ளியில் முதலைகள் அட்டகாசம்

அண்மையில் பெய்த பலத்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தைத் தொடர்ந்து மாவடிப்பள்ளி ஆற்றை அண்டிய பிரதேசம், வயல் பிரதேசம் மற்றும் சாய்ந்தமருது கரைவாகு வட்டை பிரதேசம் ஆகியவற்றில் பகலிலும் இரவிலும் முதலைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

ஆறு, குளம், குட்டைகளில் வசித்து வந்த முதலைகள் வெள்ளநீர் காரணமாக மேற்படி பிரதேசங்களில் சர்வசாதாரணமாக உலாவித்திரிகின்றன.

இவை ஊருக்குள் காணப்படும் மறைவான இடங்களில் பகல்வேளையில் தங்கியிருந்து இரவு வேளைகளில் கோழி மற்றும் ஆடுகளை வேட்டையாடி வருகின்றன.

இதனால் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோர் பெரும் நஷ்டத்தை எதிர்கொண்டு வருவதோடு பெண்களும், சிறுவர்களும், முதியோர்களும் பெரும் அச்சத்துடனேயே இரவு வேளையைக் கழிக்க வேண்டி உள்ளது.



# சர்வதேசக் கடமைகளுக்கு இணங்க மனித உரிமைகள் மேம்படுத்தப்படும்



## ஜீ.எல்.பீரிஸ் உறுதி

நல்லிணக்கத்தின் முன்னேற்றம் மற்றும் நாட்டின் சர்வதேசக் கடமைகளுக்கு இணங்க மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்குமான நம்பகமான உள்நாட்டுக் கட்டமைப்பு தொடர்பாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஹங்கேரிய வெளிவிவகார அமைச்சருக்குத் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஹங்கேரிய வெளியுறவு மற்றும் வர்த்தக அமைச்சர் பீட்டர் சிஜார்டோவுடன் நடைபெற்ற இருதரப்பு சந்திப்பிலே இது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

மேலும் இந்த சந்திப்பின் போது –

இலங்கை – ஹங்கேரி இருதரப்பு உறவுகளை முடிவு சார்ந்த, பலதரப்பட்ட பங்காளித்துவமாக மாற்றுவதற்கான இலங்கையின் தீவிரமான ஆர்வத்தை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் வெளிப்படுத்தினார்.

இருதரப்பு ஆர்வமுள்ள பல துறைகள் குறித்து இரு அமைச்சர்களும் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

எஞ்சியிருக்கும் நல்லிணக்கப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஹங்கேரியின் அணுகுமுறையைப் பாராட்டிய அமைச்சர் பீரிஸ், நல்லிணக்கத்தின் முன்னேற்றம் மற்றும் நாட்டின் சர்வதேசக் கடமைகளுக்கு இணங்க மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் உள்ள நம்பகமான உள்நாட்டுக் கட்டமைப்பு குறித்தும் ஹங் கேரிய அமைச்சருக்குத் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் ஹங்கேரி அங்கம் வகிப்பதாகவும், அதனுடன் இலங்கை முக்கியமான மற்றும் நிலையான பங்காளித்துவத்தைப் பேணி வருவதாகவும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

தற்போதைய உலக சூழலில் வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா உறவுகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பொருளாதார உறவுகளை விரிவுபடுத்துதல் மற்றும் ஆழமாக்குதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இரு அமைச்சர்களும் எடுத்துரைத்தனர்.

இந்த நோக்கத்தில், பொருளாதார ஒத்துழைப்புக்கான இலங்கை – ஹங்கேரி கூட்டு ஆணைக்குழுவின் இரண்டாவது அமர்வை இந்த வருட முற்பகுதியில் கூட்டுவதற்கு இரு அமைச்சர்களும் ஒப்புக்கொண்டனர். ஐரோப்பிய ஒன்றியச் சந்தைக்கான வரியற்ற அணுகலின் மூலம் இலங்கையின் முக்கிய ஏற்றுமதிகள் பயனடைந்து வருவதனால், ஹங்கேரிய சந்தையை அணுகுவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை வசதியை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கிடையேயான இரட்டை வரிவிதிப்பு ஒப்பந்தத்தை ஆரம்பத்தில் இறுதி செய்து, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், ஆயுர்வேதம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகியவற்றிலான ஒத்துழைப்பு குறித்தும் இதன்போது ஆர்வம் காட்டப்பட்டது.

இந்த விஜயத்தின் போது, ஹங்கேரியில் இருந்து விஜயம் செய்திருந்த வர்த்தகக் குழுவுடன் சென்ற அமைச்சர் சிஜார்டோ, இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தின் கீழ் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவுடன் இணைந்து இலங்கை – ஹங்கேரி வர்த்தக மன்றத்தை ஆரம்பித்து வைத்தார்.

அபிவிருத்தி ஒத்துழைப்பு என்பது இருதரப்பு பங்காளித்துவத்தின் முக்கிய அங்கம் எனக் குறிப்பிட்ட அமைச்சர் பீரிஸ், இலங்கைக்கு 52 மில்லியன் யூரோ கடனுதவியின் மூலம் உட்கட்டமைப்பு அபிவிருத்தி உதவிகளை வழங்கியமைக்காக ஹங்கேரிக்கு இலங்கையின் பாராட்டுக்களைத் தெரிவித்தார். தற்போதைய திட்டங்களில் கொஹுவல மற்றும் கட்டம்பே ஆகிய இடங்களில் மேம்பாலங்கள் நிர்மாணிக்கப்படும்.

நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் அழைப்பின் பேரில், கொஹுவல மேம்பாலத்தின் நிர்மாணப் பணிகளை அமைச்சர் சிஜ்ஜார்டோ பார்வையிட்டதுடன், இரண்டு அமைச்சர்களும் அந்தத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டி வைத்தனர்.

2022- 2024ஆம் ஆண்டுக்கான ஸ்டைபென்டியம் ஹங்கேரிகம் திட்டத்தின் கட்டமைப்பிற்குள் இலங்கைக்கும் ஹங்கேரிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது அமைச்சர் சிஜ்ஜார்டோவின் விஜயத்தின் மற்றுமோர் அம்சமாகும்.

இந்தத் திட்டத்தின் கீழ், பொறியியல், விஞ்ஞானம், பொருளாதாரம் மற்றும் நீர் முகாமைத்துவம் உட்பட பரந்த அளவிலான கல்வித் துறைகளில் இளங்கலை மற்றும் முதுகலைக் கற்கைகளை மேற்கொள்வதற்குத் தகுதியான இலங்கை மாணவர்களுக்கு ஹங்கேரி ஆண்டு தோறும் 20 புலமைப்பரிசில்களை வழங்குகின்றது. புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் பயனடையும் 86ஆவது நாடாக இலங்கை உள்ளது. இலங்கை அரசாங்கத்தின் சார்பில் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

இருதரப்பு ஒத்துழைப்புத் துறையில், பரஸ்பர நலன்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக இரு வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்களுக்குமிடையே வழக்கமான அரசியல் ஆலோசனைகளைக் கூட்ட வேண்டியதன் அவசியத்தை இரு அமைச்சர்களும் ஒப்புக்கொண்டனர்.

கொவிட்-19 முன்வைத்த பகிரப்பட்ட சவால்களை எதிர்கொள்ளும் போது, உலகளாவிய தடுப்பூசி சமத்துவத்தை செயற்படுத்துவதற்காக, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஹங்கேரி போன்ற இருதரப்பு நாடுகளின் ஊடாக ஐரோப்பாவில் உள்ள நாடுகள் வழங்கிய ஆதரவை அமைச்சர் பீரிஸ் ஒப்புக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர்களின் திருநாளாம் தைத்திருநாள் நாட்டின் பல பகுதிகளிலும் விசேட பூஜை!

தமிழர்களின் திருநாளாம் தைத்திருநாளை முன்னிட்டு நேற்று நாடளாவிய ரீதியாக விசேட பூஜை வழிபாடுகளும், பொங்கல் பொங்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

உழைக்கும் மக்கள் இயற்கைக்கும், மற்ற உயிர்களுக்கும் நன்றி சொல்லும் ஒரு நாளாக தைத் திருநாளைக் கொண்டாடுகின்றனர்.

நல்ல விளைச்சல் கொடுத்தமைக்காக பூமிக்கும், விவசாயத்துக்கு உதவியமைக்காக மாட்டுக்கும், இவற்றுக்கு ஒளி பாய்ச்சி அருளித்தமைக்காக சூரியனுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக பொங்கல் படைத்து இந்நாளில் வழிபடுவார்கள்.

ஆண்டு தோறும் இந்தப் பண்டிகை தமிழ் மக்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருவது வழமையாகும்.

அந்தவகையில், யாழ்ப்பாணத்தில் நேற்று பொங்கல் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.

யாழ்.மக்கள் விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டதோடு, வீடுகளிலும் பொங்கல் பொங்கி சூரியனுக்கும் இயற்கைக்கும் நன்றிகளைத் தெரிவித்தனர்.

கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் தைத்திருநாளை முன்னிட்டு விசேட பொங்கல் நிகழ்வும் விசேட பூஜையும் நடைபெற்றது.

ஆலய பிரதமகுரு சிவ ஸ்ரீஜீண ஆதிசௌந்தரராஜ குருக்கள் தலைமையில் ஆலய வண்ணக்கர்மார்களுடன் பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்தில் மாமாங்கேஸ்வரருக்கு விசேட அபிகே ஆராதனைகள் நடைபெற்று ஆலய முன்றிலில் பொங்கல் பொங்கப்பட்டு சூரிய பகவானுக்கு விசேட பூஜைகள் நடத்தப்பட்டன.

அதனை தொடர்ந்து ஆலயத்தில் மாமாங் கேஸ்வரருக்கு விசேட பூஜைகள் நடைபெற்றன.



கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பக்தர்கள் மட்டுப்படுத்தப்பட்டு அனுமதிக்கப்பட்ட நிலையில் சுகாதார வழிமுறைகளுடன் ஆலயத்தில் தைப்பொங்கல் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

வவுனியாவிலும் பொங்கல் தின நிகழ்வுகள் சிறப்பாக கொண்டாடப்பட்டன.

விவசாயத்தைக் தமது ஜிவனோபாயமாகக் கொண்டு வாழும் மக்கள் அதிகமாக உள்ள வவுனியா மண்ணில் வீட்டிலும், தொழில் ஸ்தாபனங்களின் முற்றத்திலும், ஆலயங்களிலும், அரச மற்றும் தனியார் திணைக்களங்களிலும் பொங்கல் நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

மாவிலைத் தோரணம்கட்டி, கோலமிட்டு, கலாசார ஆடைகள் அணிந்து புதுப்பானையில் பொங்கி பட்டாசு கொளுத்தி மக்கள் இதன்போது மகிழ்ந்தனர்.

அஹிதுநேரம். தைத் திருநாளை முன்னிட்டு முல்லைத்தீவில் இந்து ஆலயங்களிலும், கிறிஸ்தவ தேவாலயங்களிலும் பொங்கல் பொங்கப்பட்டு விசேட பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

மலையக மக்களும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சமய வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து தை பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

ஹற்றன் பகுதியில் ஸ்ரீஜீண மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் பிரதான குருக்கள் பிரம்மஸ்ரீ பூர்ண சந்திராணந்த குருக்கள் தலைமையில் தைபொங்கல் விசேட சமய வழிபாடுகள் நடைபெற்றன.

விசேட பூஜை வழிபாடுகளில் ஆலய பரிபாலன சபையினர் உட்பட பொது மக்களும் இவ்வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

அத்தோடு மலையகத்தில் பல ஆலயங்களில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி விசேட வழி பாடுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15 .01.2022இல் வெளியிடப்பெற்றது.